பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4
10 12 2024 7 15
செவ்வாய்கிழமை இரவு

<u>தலைப்புச் செய்திகள் -</u>

- இணையதள குற்றங்கள், பருவநிலை மாற்றம் போன்றவை மனித உரிமைகளுக்கு அச்சுறுத்தல்களாக உருவெடுத்துள்ளன என்று குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.
- மகாகவி சுப்ரமணிய பாரதியாரின் இலக்கிய படைப்புக்களின் தொகுப்பை பிரதமர் திரு நரேந்திரமோடி நாளை புதுதில்லியில் வெளியிடுகிறார்.
- தமிழகத்தில் மழையால் பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தேவையான நிதி உதவியை அளிக்குமாறு மத்திய இணை அமைச்சர் டாக்டர் எல் முருகன், இன்று மத்திய அமைச்சர்கள் திருமதி நிர்மலா சீதாராமன், திரு ராஜீவ் ரஞ்ஜன் சிங் ஆகியோரை நேரில் சந்தித்து கேட்டுக் கொண்டார்.
- 2025- ஆம் ஆண்டு மத்திய பல்கலைக்கழகங்களுக்கான இளநிலை பொது நுழைவுத் தேர்வு கணினி வழியாக நடத்தப்படும் என்று பல்கலைக்கழக மானியக்குழு தெரிவித்துள்ளது.
- சிரியா தலைநகர் damascus உள்ளிட்ட பல இடங்களில் இஸ்ரேல் வான்வளி தாக்குதலை நடத்தியுள்ளது.

<u>*----- இனி விரிவான செய்திகள் ---*</u>

[]<<<>>>[]

இணையதள குற்றங்கள் மற்றும் பருவநிலை மாற்றம் போன்றவை மனித உரிமைகளுக்கு எதிரான அச்சுறுத்தல்களாக உருவெடுத்துள்ளன என்று குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

தேசிய மனிதஉரிமைகள் ஆணையம் சார்பில், புதுதில்லியில் இன்று நடைபெற்ற மனித உரிமைகள் தின நிகழ்ச்சியில் பேசிய அவர், அனைவரது உரிமைகள் மற்றும் கண்ணியத்தை பாதுகாக்கக்கூடிய சமமான டிஜிட்டல் சூழலை உறுதி செய்வது அவசியம் என்றார்.

டிஜிட்டல் யுகம் மாற்றத்திற்கு ஆளாகக்கூடியது என்றாலும், இணைய மோசடிகள், ‘deep fake ’ , தனிநபர் ரகசியம் மற்றும் அவதூறு பரப்புதல் போன்றவற்றையும் எதிர்கொள்ள வேண்டியிருப்பதாக அவர் கூறினார்.

ஐயாயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட நாகரீக பாரம்பரியம் கொண்ட இந்தியா, கருணை, இரக்கம், போன்றவற்றுடன் இணக்கமான சமுதாயத்தை கொண்ட நாடாக திகழ்வதாகவும் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்தார்.

[]<<<>>>[]

மகாகவி பாரதியாரின் 143-வது பிறந்த நாள் நாளை கொண்டாடப்படுகிறது.

இதனையொட்டி சுப்ரமணிய பாரதியாரின் இலக்கிய படைப்புக்களின் தொகுப்பை பிரதமர் திரு நரேந்திரமோடி நாளை புதுதில்லியில் வெளியிடுகிறார்.

தமது இல்லத்தில் நடைபெறும் நிகழ்ச்சியில் 23 தொகுதிகள் கொண்ட இந்த தொகுப்பை அவர் வெளியிடவுள்ளார்.

மகாகவி பாரதியாரின் படைப்புக்களை சீனி விஸ்வநாதன் தொகுப்பாக தயாரித்துள்ளார்.

நாட்டு விடுதலைக்கான வேட்கையையும், இந்திய கலாச்சாரத்தையும், பாரம்பரியத்தையும் தமது பாடல்கள் மூலமாக மகாகவி பாரதி மக்களிடையே கொண்டு சேர்த்துள்ளார்.

[]<<<>>>[]

ரஷ்யா சென்றுள்ள பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் மற்றும் அந்நாட்டு பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ‘Andrey Belousov’ ஆகியோர் தலைமையில் இந்திய – ரஷ்யா அரசுகளுக்கு இடையேயான ஆணையத்தின் 21-ஆவது கூட்டம் இன்று நடைபெற்றது.

இருநாட்டு ராணுவங்களுக்கு இடையிலான ஒத்துழைப்பு மற்றும் தொழில்துறை ஒத்துழைப்பு உள்ளிட்ட அம்சங்கள் குறித்து இரு அமைச்சர்களும் விரிவாக ஆலோசனை நடத்தினர்.

மேலும் பரஸ்பரம் நலன் சார்ந்த பல்வேறு பிராந்திய மற்றும் சர்வதேச விவகாரங்கள் குறித்தும் அவர்கள் விவாதித்தனர்.

முன்னதாக, இன்று காலை மாஸ்கோவில் உள்ள போர் வீரர்கள் நினைவுச்சின்னத்தில் திரு ராஜ்நாத் சிங் மலர்வளையம் வைத்து மரியாதை செலுத்தினார்.

[]<<<>>>[]

மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் 97 சதவீதம் பண பரிவர்த்தனை ஆதார் கட்டமைப்புடன் இணைக்கப்பட்டுள்ளதாக மத்திய ஊரக மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு சிவராஜ் சிங் சௌகான் தெரிவித்துள்ளார்.

மக்களவையில் இது தொடர்பாக அவர் தாக்கல் செய்த எழுத்துப்பூர்வமான பதிலில் 35 கோடியே 45 லட்சத்துக்கும் கூடுதலான பண பரிவர்த்தனைகள் ஆதார் கட்டமைப்பில் வழங்கப்பட்டுள்ளதாகக் கூறியுள்ளார்.

[]<<<>>>[]

தூய்மை இந்தியா இயக்கம் - கிராமப்புற திட்டத்தின்கீழ், திறந்தவெளி கழிப்பிடம் இல்லாத கிராமங்களை உருவாக்க, மத்திய அரசின் பங்குத்தொகையாக, கடந்த நவம்பர் மாதம் வரை சுமார் ஆயிரத்து 869 கோடி ரூபாய் விடுவிக்கப்பட்டிருப்பதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

மக்களவையில் இன்று கேள்வி ஒன்றுக்கு எழுத்துமூலம் அளித்த பதிலில் இதனை தெரிவித்துள்ள மத்திய ஊரக வளர்ச்சி அமைச்சகம், இந்த திட்டத்தின் ஒருபகுதியாக திடக்கழிவுகளை கொட்டுவதற்கான குழிகள், கழிவுநீர் குட்டைகள் மற்றும் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் போன்றவையும் அமைக்கப்பட்டிருப்பதாக கூறியுள்ளது.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித்திட்டத்தின்கீழ், நாடு முழுவதும் 56 லட்சத்திற்கும் மேற்பட்ட தனிநபர் கழிவறைகள் கட்டப்பட்டுள்ளதாக அந்த அமைச்சகம் தெரிவித்துள்ளது.

[]<<<>>>[]

2025- ஆம் ஆண்டு மத்திய பல்கலைக்கழகங்களுக்கான இளநிலை பொது நுழைவுத் தேர்வு கணினி வழியாக நடத்தப்படும் என்று பல்கலைக்கழக மானியக்குழுத் தலைவர் திரு ஜக்தீஷ்குமார் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், ப்ளஸ்-டூ-வில் படித்த பாடங்களின் அடிப்படையில் இல்லாமல் எந்த ஒரு தேர்விலும் மாணவ மாணவியர் கலந்து கொண்டு தேர்வு எழுதலாம் என்று கூறினார்.

இளநிலை பொது நுழைவுத் தேர்வு வரும் ஆண்டில் 63 பாடங்களில் நடத்தப்படும் என்றும், அனைத்து தேர்வுகளும் 60 நிமிடம் இடம்பெறும் என்றும் அவர் தெரிவித்தார்,

க்யூட் தேர்வில் ஐந்து பாடங்கள் வரை தேர்வு எழுதி மாணவ மாணவியர் தங்களுக்கான வாய்ப்பை பெற்றுக்கொள்ளலாம் என திரு ஜக்தீஷ்குமார் கூறினார்.

[]<<<>>>[]

தமிழகத்தில் பெஞ்சல் புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகளை கண்டறிந்து அவர்களுக்கான உதவியை அளிக்க வேண்டுமென்று மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணை அமைச்சர் டாக்டர் எல் முருகன் மத்திய நிதி அமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமனை இன்று புதுதில்லியில் சந்தித்து கேட்டுக் கொண்டார்.,

மீன்வளத்துறை அமைச்சர் திரு ராஜீவ் ரஞ்ஜன் சிங்கையும் சந்தித்து பாதிக்கப்பட்ட 69 லட்சம் குடும்பங்களுக்குத் தேவையான பேரிடர் நிவாரண உதவிகளை வழங்கவும் அவர் கோரிக்கை வைத்தார்.

தமிழக பிஜேபி-யின் மூத்த தலைவர்களும் மத்திய இணை அமைச்சருடன் சென்றிருந்தனர்.

[]<<<>>>[]

திருவண்ணாமலை மாவட்டத்தில் பெஞ்சல் புயல் மற்றும் கனமழையால் பாதிக்கப்பட்ட பகுதிகளை மத்திய குழுவினர் இன்று பார்வையிட்டனர்.

மத்திய அரசின் உயரதிகாரிகள் திரு சரவணன், திரு தனபாலன் குமரன், திரு கே எம் பாலாஜி ஆகியோர் கொண்ட குழுவினர் பாதிக்கப்பட்ட பகுதிகளை ஆய்வு செய்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

அண்ணாமலையார் மலையில் மண் சரிவு ஏற்பட்டு ஏழு பேர் உயிரிழந்த பகுதிகளையும் அவர்கள் பார்வையிட்டனர்.

சின்னகாங்கேயனூர், கீழ்ப்பெண்ணாத்தூர் உள்ளிட்ட பகுதிகளில் வீடுகள் மற்றும் வயல்களுக்கு ஏற்பட்ட சேதங்களை அவர்கள் பார்வையிட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

[]<<<>>>[]

நாடு முழுவதும் ஸ்மார்ட் இந்திய ஹேக்கத்தான் இறுதிக்கட்ட போட்டிகள் நாளை 51 இடங்களில் தொடங்குகிறது.

தமிழகத்தில் கோவை குனியமுத்தூரில் உள்ள தனியார் பொறியியல் கல்லூரியில் இப்போட்டிகள் நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*( வாஸ்பைட் - ஹரிகரன் ) --- 45 செகண்ட்*

[]<<<>>>[]

தென்கிழக்கு வங்கக்கடல் பகுதியில் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதி காரணமாக தமிழகத்தில் அநேக இடங்களில் அடுத்த நான்கு நாட்களுக்கு மிதமான மழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையத்தின் தென்மண்டல தலைவர் திரு பாலச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், டெல்டா மாவட்டங்களில் அடுத்த 24 மணி நேரத்திற்கு கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளதாகவும் கூறினார்.

*( சவுண்ட்பைட் - பாலச்சந்திரன் ) -58-- செகண்ட்*

தமிழக கடலோரப் பகுதிகளில் வரும் 13-ஆம் தேதி வரை 55 கிலோமீட்டர் வேகம் வரை எட்டக்கூடிய சூறைக்காற்று வீசக்கூடும் என்றும், மீனவர்கள் கடலுக்குச் செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப்படுவததாகவும் அவர் தெரிவித்தார்.

*( சவுண்ட்பைட் - பாலச்சந்திரன் ) -16-- செகண்ட்*

[]<<<>>>[]

சிரியா தலைநகர் damascus உள்ளிட்ட பல இடங்களில் இஸ்ரேல் வான்வளி தாக்குதலை நடத்தியுள்ளது.

பிரிட்டனில் உள்ள சிரியாவின் மனித உரிமை கண்காணிப்பு அமைப்பு வெளியிட்டுள்ள தகவலில் கடந்த இரண்டு நாட்களில் நூற்றுக்கும் மேற்பட்ட தாக்குதல்களை இஸ்ரேல் நடத்தி இருப்பதாக தெரிவித்துள்ளது.

*End of News*